பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 06 | செவ்வாய்க்கிழமை | 20.01.2026 | அதிர்வு 173

# யாழில் எலிக்காய்ச்சலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணத்தில் எலிக்காய்ச்சல் காரண மாக குடும்பஸ்தர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார். 07

# மாகாண சபைத் தேர்தல் தாமதம் அரசின் பயணத்துக்குப் பேராபத்து!

## ரவி எம்.பி. கடும் எச்சரிக்கை



“மாகாண சபைத் தேர்தலை இனியும் இந்த அரசால் காலம் தாழ்த்த முடியாது. இந்த அரசு அரசமைப்புக்கு ஏற்பச் செயற் படுவது உண்மையெனில் இந்த வருடம் மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண் டும். அவ்வாறில்லை எனில் அது அரசின் தொடர்ச்சியான பயணத்துக்குச் சிறந்த பாதையல்ல.” 06



# சிங்கள பௌத்தர்களின் பொறுமைக்கும் எல்லை உண்டு!

## ஜனாதிபதிக்கு வீரசேகர மிரட்டல்

“இந்த நாட்டின் பௌத்த மதத்தை அவ மதிக்கும் வகையில் என்.பி.பி. அரசு செயற் படுகின்றது. சிங்கள பௌத்தர்களின் பொறு மைக்கும் ஓர் எல்லை உண்டு என்பதை ஜனா திபதி அநுரகுமார திஸாநாயக்க விளங்கிக் கொள்ள வேண்டும்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சரத் வீரசேகர தெரிவித் தார். 07

# அநுரவின் சொந்த மண்ணில் மொட்டுவின் பலம் நிரூபணம்

## இப்படி மார்தட்டுகின்றார் சாகர




அநுரவின் சொந்த ஊரில் பலத்தை காட்டிவிட்டோம்: மொட்டு கட்சி பெருமிதம்!

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சொந்த ஊரில் வெற்றிகரமாக கூட்டத்தை நடத்தி எமது அரசியல் பலத்தை வெளிப்படுத்தியுள்ளோம்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் 07




உள்ளூராட்சித் தேர்தலில் நேருக்கு நேர் எதிர்த்துப் போட்டியிட்ட சங்கு கூட்டணியும் சைக் கிள் கட்சி அணியும் தேர்தல் முடிந்த பின்னர் சபை நிர்வாகங்களைக் கைப்பற்றுவதற்காக தங்களுக்குள் உடன்பாடு கண்டபோது, அது ‘கொள்கைக் கூட்டு’ என்று சைக்கிள் கட்சித் தலை வர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. அறிவித்தார். ஆனால் அது பதவிக்கான கூட்டு என்று அப்போதே பலரும் கூறி வந்தனர்.

உள்ளூராட்சி சபை பதவிகளுக்கான தெரிவுகள் முடிவு பெற்றுள்ள நிலையில் மேற்படி கொள்கைக் கூட்டு கொள்ளை போய்விட்டது. பெரும்பாலும் சங்கு – சைக்கிள் கூட்டு தெறித்துவிட்ட நிலை மைதான்.

இந்தப் பின்புலத்தில் சங்குக் கூட்டணி மீண்டும் தமிழரசு பக்கம் சாயும் நிலைமை தெரிகிறது. திரும்பவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாணி யில் இயங்குவது குறித்து சம்பந்தப்பட்ட கட்சிகள் தங்களுக்குள் கூடிக் குலாவிக் கதைத்து வரு கின்றன என்பது தெரிந்த விடயம்தான். 06







# வடக்கில் முதலீட்டுக்கு ஏற்ற சூழலை உருவாக்க வேண்டியது எம் பொறுப்பு

## ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

முதலீட்டாளர்கள் வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு ஆர்வமாக உள்ள நிலையில், அதற்கான அடிப்படை உட்கட்டுமானங்களை மேம்படுத்தி, முதலீட்டுக்கு ஏற்ற சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

நிதி அமைச்சின் கீழான தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு – செலவுத் திட்டத் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவற்றின் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழான உலக வங்கியின் திட்டங்களுக்கான பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினருக்கும், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான அதிகாரிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவினர் வடக்கு மாகாணத்துக்கு உத்தியோகபூர்வமாக மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவாகும்.

இந்தக் கலந்துரையாடலில் உரையாற்றிய ஆளுநர் தெரிவித்ததாவது:–

“போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், வடக்கு மாகாணம் மீளக்கட்டியெழுப்பப்படுவதில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. பிரதான வீதிகள் புனரமைக்கப்பட்டிருந்தாலும், கிராமப்புற வீதிகள் மற்றும் தீவகப் பிரதேசங்களுக்கான போக்குவரத்து வசதிகள் மிகவும் பின்தங்கியுள்ளன. கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான நீண்ட பயண நேரம் சுற்றுலாவிகளுக்குச் சவாலாக உள்ளது.

எனினும், இந்தியாவுடனான நேரடி வான் மற்றும் கடல்வழித் தொடர்புகள் சுற்றுலாவிகளின் வருகையை அதிகரிக்கச் செய்துள்ளது. எனவே, எதிர்காலத்தில் அதிகரிக்கவுள்ள சுற்றுலாவிகளைக் கருத்தில் கொண்டும், எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள முதலீட்டாளர் மாநாட்டைக் கருத்தில் கொண்டும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

எமது மாகாணத்தின் மூலப்பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு, மீண்டும் முடிவுப் பொருட்களாக இங்கேயே விற்பனைக்குவரும் நிலை மாற்றப்பட வேண்டும். இங்கேயே அவற்றைப் பெறுமதி சேர் பொருட்களாக மாற்றுவதற்குரிய பொறிமுறைகள் அவசியம்.

உலக வங்கியின் “புத்துயிர்” திட்டத்தின் முதல் கட்டத்தில் யாழ். மாவட்டம் மட்டுமே உள்வாங்கப்பட்டுள்ளது. ஆனால், வடக்கின் ஏனைய நான்கு மாவட்டங்களும் அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளன. எனவே, ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கி எமது பொருளாதார மேம்பாட்டை உறுதிப்படுத்த நாம் விரும்புகின்றோம்.” – என்றார்.

இதன்போது மாவட்ட செயலாளர்களால் பின்வரும் முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன:–

முல்லைத்தீவு:– கொக்கிளாய் பாலம் அமைத்தல்.

கிளிநொச்சி:– நீர் விநியோகத் திட்டம் மற்றும் பூநகரி கௌதாரிமுனைச் சுற்றுலா வீதிப் புனரமைப்பு.

மன்னார்:– வீதிப் புனரமைப்பு மற்றும் மன்னார் தீவின் வடிகாலமைப்பு மேம்பாடு.

வவுனியா:– வடக்கின் நுழைவாயிலான வவுனியாவின் வன்னேரிக்குளம் சுற்றுலாத் திட்டத்தை உள்வாங்குதல்.

யாழ்ப்பாணம்:– தெரிவு செய்யப்பட்ட திட்டங்களை விரைவுபடுத்தல்.

இதற்குப் பதிலளித்த நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள், “வடக்கு மாகாணத்திலிருந்து நியாயப்பாடுகளுடன் கூடிய சிறந்த திட்டங்கள் முன்வைக்கப்படும் பட்சத்தில், முன்னுரிமை அடிப்படையில் உலக வங்கித் திட்டங்களை மாற்றியமைக்க முடியும். எனினும், இவை கடன் நிதிகள் என்பதால், முதலீட்டுக்குரிய நற்பேறுகள் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும். தேவைப்பாடுகளை சரியாக அடையாளம் கண்டு மிகச் சிறந்த திட்டங்களை முன்வைக்கும்போது அரசால் கூட நிதி வழங்க முடியும்.” – என்று குறிப்பிட்டனர்.

மேலும், கிராமிய மற்றும் நகர்ப்புறங்களை இணைக்கும் “ரூபன்” திட்டம் மற்றும் விவசாயத் துறைசார் திட்டமிடல்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

கடந்த கால வெளிநாட்டு நிதித் திட்டங்களின் அனுபவங்களைக் கொண்டு, இனிவரும் திட்டங்கள் மாகாணத் தேவைகளைச் சரியாக அடையாளப்படுத்தி முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகங்களான இந்திக பிரேமரத்ன (தேசிய திட்டமிடல்), ஜூட் நிலுக்ஷ (தேசிய வரவு – செலவு), சமந்த பண்டார (வெளிநாட்டு வளங்கள்) மற்றும் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், ஆளுநரின் ஆலோசனைக் குழுவின் தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.









# உலகப் பொருளார மாநாட்டில் பங்கேற்க பிரதமர் ஹரிணி சுவிட்சர்லாந்து பயணம்

உலகப் பொருளாதார மன்றத்தின் 56ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று அதிகாலை சுவிட்சர்லாந்து நோக்கிப் பயணமானார்.

ஜனவரி 19 முதல் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இம்மாநாட்டில், கொள்கை வகுப்பாளர்கள், புத்தாக்கச் சிந்தனையாளர்கள் மற்றும் உலகளாவிய தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இரு தரப்பு சந்திப்புகளை நடத்தவுள்ளார்.

பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் பிரதமருடன் சென்றுள்ளனர்.





# செம்மணி மனித புதைகுழி அகழ்வு பகுதிக்குள் தேங்கியுள்ள மழை நீரை அகற்ற நடவடிக்கை



செம்மணி மனித புதைகுழி அகழ்வு பகுதிக்குள் தேங்கியுள்ள மழை நீரை எதிர்வரும் பெப்ரவரி 9 ஆம் திகதியன்று நீதிமன்றம் மற்றும் சட்ட வைத்திய அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் நல்லூர் பிரதேச சபையின் உதவியுடன் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நடைபெறும் செம்மணி மனிதப் புதைகுழி வழக்கு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நேற்றுக் காலை எடுத்துக் கொள்ளப் பட்டது.

அந்த அகழ்வுப் பிரதேசத்தை யாழ் நீதிவான் எஸ்.லெனின்குமார், சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், சட்டத்தரணிகளான வி.எஸ்.நிரஞ்சன், ரனித்தா ஞானராஜா, குற்ற புலனாய்வு திணைக்களத்தினர், பொலிஸார் அடங்கிய குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

ஏற்கனவே அகழ்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் வெள்ள நீர் புகுந்து நிரம்பிக் காணப்படுவதனால் அகழ்வு பணிகளை உடனடியாக தொடங்க முடியாது என்றும் இந்த வெள்ள நீர் வற்றும் மட்டும் பார்த்து அகழ்வு பணியை ஆரம்பிக்க வேண்டும் அல்லது அந்த நீரை அகற்ற வேண்டும் என்ற அடிப்படையில் எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை மூலம் சட்ட வைத்திய வைத்திய அதிகாரி ஊடாக நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் வெள்ள நீரை அகற்றுவதற்கான நடவடிக்கைக்கு திகதி குறிக்கப்பட்டுள்ளது.

வெள்ளநீரை அகற்றிய பின்னர் அகழ்வு பணி எப்போது நடைபெறும் என்பது தொடர்பான திகதி நிர்ணயிக்கப்படும். இந்த வழக்கு பெப்ரவரி 9-ம் திகதி மீண்டும் அழைக்கப்படவுள்ளது.

மேலும் ஆண்டு நிறைவடைந்த நிலையில் செம்மணி மனித புதைகுழி அகழ்வு பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிய நிலையில், சட்ட வைத்திய அதிகாரியால் மீண்டும் பாதீடு தயாரிக்கப்பட்டு நிதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அகழ்வு நடைபெறும் சித்துப்பாத்தி இந்து மயான பகுதியில் ஏற்கனவே இருந்த பாதைக்கு மேலாக அதனை நல்லூர் பிரதேச சபையினர் செப்பனிட்டு இருக்கிறார்கள். குறித்த விடயம் சட்டத்தரணிகளால் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மேலும் அந்த பகுதியின் நிலப்பாங்கு தொடர்பான விடயத்தில் எந்தவிதமான அபிவிருத்தியும் செய்வதற்கான அனுமதியும் கொடுக்கக் கூடாது எனவும் முழுமையான அகழ்வு பணிகள் பூர்த்தியாகும் வரை நிலத்தோற்றத்தில் மாற்றம் செய்யக்கூடாது என்றும் இதில் எதிர்வரும் காலத்தில் எதுவாக இருந்தாலும் நீதிமன்றத்தின் அனுமதி அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டது.

செம்மணி மனித புதைகுழியில் இருந்து இதுவரையில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளின் போது, 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.





# கனடா செல்ல முன் தூதருடன் ஹக்கீம் பேச்சு

சில தினங்களில் கனடா செல்லவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அந் நாட்டின் உயர் ஸ்தானிகர் இஸபெல் மார்டினை (Isabelle Martin) சந்தித்து பரஸ்பரம் ஆர்வமுள்ள இரு தரப்பு விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

இதன்போது அரசியல் மற்றும் வர்த்தக ஆலோசகர் குவென் டெமெல்(Gwen Temmel) உடனிருந்தார்.

இந்த சந்திப்பு கொழும்பிலுள்ள கனடா உயர் ஸ்தானிகராலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.





# தலைமைப் பதவிக்கு சிறுபான்மை தலைவர்களையும் பெரும்பான்மைச் சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்!

## அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெதமுல்ல ஆலோசனை





(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

தமிழ் பேசும் சிறுபான்மை சமூகம் ஏற்றுக்கொண்டுள்ள ஒரு தலைவராக தற்போதைய ஜனாதிபதி திகழ்கிறார். இதே போன்று சிறுபான்மை சமூகத்திலிருந்து நாட்டின் தலைமைப் பதவிக்கு வரும் தலைவர்களை பெரும்பான்மை சமூகம் ஏற்றுக்கொள்ளும் மனநிலை உருவாக வேண்டும். இது நடக்குமா என்பதே எனது கனவாகும் என அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெதமுல்ல தெரிவித்தார்.

ஸ்கை தமிழ் ஊடகத்தின் கீழ் இயங்கும் “துணிந்தெழு“ சஞ்சிகையின் 5ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட “துணிந்தெழு சங்கமம்” விசேட விழா கடந்த சனிக்கிழமை கல்முனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெதமுல்ல கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

பொலிஸ் துறைக்கும், ஊடக துறைக்கும் பாரிய சமூகப் பொறுப்பு இருக்கின்றது. இந்த துறையிலுள்ளவர்கள் இதனை உணர்ந்து செயற்படுவது அவசியமாகும்.

30 வருட யுத்தத்தினால் நாம் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். இதனால் இனங்களுக்கிடையில் பிரிவினை காணப்பட்டதுடன் நாடு பின்நோக்கி சென்றுள்ளது. எனவே சீரழிந்த நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் இணைந்து இன, மத, பிரதேச வேறுபாடின்றி செயற்பட முன்வர வேண்டும்.

எனது 35 வருட பொலிஸ் சேவையில் ஊடகவியலாளர்கள் பங்கும் உள்ளது. அவர்களிடம் சிநேகபூர்வ உறவைப் பேணி வருகின்றேன்.

என்னை பொறுத்த வரை ஊடக துறை மூலம் இலாப நோக்கத்தை அடைந்து கொள்ள வேண்டும் என சொற்பட்டால் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். சுயநலத்திற்காவோ இலாபத்திற்காகவோ ஊடகத்துறையை முன்னெடுப்பது பொருத்தமானதல்ல. ஊடகத்திற்கு மட்டும்தான் மக்களை சிந்திக்க வைக்கவும் அவர்களது மனநிலையை மாற்றவும் கூடிய சக்தி காணப்படுகின்றது.

தற்காலத்தில் எத்தனை தொழில் நுட்பங்கள் வளர்ச்சி அடைந்தாலும் ஒரு புத்தகத்தின் எழுத்திற்கு இருக்கும் சக்தி எதற்கும் இல்லை. ஒவ்வொருவரும் தமது சம்பளத்திலாவது ஒரு புத்தகத்தை வாங்க முன்வர வேண்டும். ஊடகவியாளர்களும், எழுத்தாளர்களும் மட்டும்தான் புத்தகங்களை படிக்க வேண்டும் என்றில்லை. அனைவரும் புத்தகங்களை படிக்க வேண்டும். - எனவும் தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்கனவே தமிழரசு – சங்கு கூட்டணித் தலைவர்கள் மாதந்தோறும் தங்களுக்குள் அவ்வப்போது கூடிப் பேசி விடயங்களை முன்நகர்த்த முடிவு செய்திருந்தனர். அந்த வகையில் ஜனவரி மாதத்துக் கான கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நட்சத்திர விடுதி ஒன்றில் இடம்பெற இருக்கின்றது. கூட்டத்தில் பயன் தரும் விடயங்கள் பேசப்பட்டால் நாளை அவற்றைப் பார்ப்போம்.

*  *  *

சூறாவளி சமயம் கிளிநொச்சியில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்த கிராம சேவையாளர் ஒருவரை தாக்கி னார் என்ற குற்றச்சாட்டில் வழக்கு ஒன்றை எதிர்கொள்கிறார் ஆளும் தரப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன்.

அந்த வழக்கு இன்று காலை கிளி நொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் எடுத் துக் கொள்ளப்பட இருக்கின்றது. இந்த வழக்கில் இதுவரை மன்றில் முன்னிலை யாகாத இளங்குமரன் எம்.பி. இன்று முன்னிலையாவாரா என்பதை நீதிமன் றத்தில்தான் பார்க்க வேண்டும்.

*  *  *

தமிழ்நாடு அரசு நடத்திய அயலகத் தமிழர்கள் மாநாடு கடந்த 11, 12 ஆம்



Dr M. VALLALAR, I.A.S.,
Commissioner
Commissionerate of Rehabilitation & Non-Resident
Tamil Welfare Department

**Lr.No. G2/ 4004 / WTDD 2026**
**Dated 12.11.2025**

**Dear Mr M. A. Sumanthiran,**
Former MP, Sri Lanka

Sub: Welfare of Non–Resident Tamils – Request to inform the willingness to participate in World Tamil Diaspora Day 2026 on 11th and 12th January, 2026 in Chennai, Tamil Nadu, India - Reg

World Tamil Diaspora Day-2026, a historic global gathering of Tamil heritage, intellect, and unity, is proposed to be held on January 11 and 12, 2026, at the splendid Chennai Trade Centre, Chennai, Tamil Nadu, India.

This prestigious international event will be inaugurated by the Hon'ble Chief Minister of Tamil Nadu, in the gracious presence of global Tamil scholars, achievers, artists, entrepreneurs, scientists, and representatives of Tamil Sangams from around the world.

- Honouring the Achievers of Tamil Origin on the World Stage — celebrating Tamils who have excelled in diverse fields such as science, art, business, innovation, education, sports and humanitarian service.
- Global Tamil Conference — bringing together thinkers, innovators, and community leaders from across continents.
- Tamil Heritage Pavilion — a vibrant showcase of Tamil Nadu's ancient language, culture, literature, and fine arts.
- MoU Ceremony for the Deployment of Tamil Language & Fine Arts Teachers Abroad, in partnership with overseas Tamil Sangams.
- Cultural Extravaganza featuring world-class Tamil music, dance, and literature performances.
- Diaspora Business & Investment Forum — connecting Tamil entrepreneurs and investors worldwide.
- Interactive Exhibitions and Heritage Stalls — displaying Tamil Nadu's progress, innovation, and cultural legacy.

Dr M. VALLALAR, I.A.S.,
Commissioner
Commissionerate of Rehabilitation & Non-Resident
Tamil Welfare Department

The World Tamil Diaspora Day is not just a conference; it is a homecoming of hearts. A time for every Tamil around the world to rediscover their roots, celebrate their achievements, and renew their bond with the soil that gave them their identity. This celebration embodies the Tamil spirit of compassion, intellect, creativity, and resilience, uniting millions under one timeless identity: **Tamil.**

The first World Tamil Diaspora Day was held in 2022, followed by the second edition in 2023. The third celebration, in 2024 and the fourth in 2025, welcomed over 1715 participants from 631 Associations across 62 countries and 15 Indian states, showcasing cultural events, panel discussions and business meet.

This invitation is sent in advance, and upon receiving your consent to participate, a formal invitation will be sent by the Government of Tamil Nadu directly.

I request your consent to share the dais with the Hon'ble Deputy Chief Minister of Tamil Nadu on the World Tamil Diaspora Day - 2026.

Commissioner,
Commissionerate of
Rehabilitation & Non-Resident
Tamil Welfare Department
Chepauk, Chennai-05

**For Further Details & Updates:**
**Email:** nrtchennai@gmail.com
**Phone No:** 044- 2852 5648 / 94443 94009

திகதிகளில் சென்னையில் நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் விசேட அதிதியாக அழைக்கப்பட்டிருக்கின் றார். அவர் அந்த நிகழ்வில் பங்குபற்று வதற்காக தமிழகம் செல்கின்றார் என்ற செய்தியை என் பத்தியில் தெரிவித்திருந் தேன்.

நீதியரசர் விக்னேஸ்வரனும், கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம்.பியும் கூட இவ்வாறு அழைக்கப்பட்டும் அவர்கள் நிகழ்வுக்குப் போகவில்லை என்ற தக வலையும் அப்போது குறிப்பிட்டிருந்தேன்.

சுமந்திரன் இந்தியா செல்வது குறித்து அறிந்து அது பற்றி விசாரிப்பதற்காக நான் விவரம் கேட்ட போது, தமக்கு வந்த அழைப்பின் பிரதியை மாநாட்டுத் தகவல்கள் மற்றும் விவரங்களுக்காக என்னுடன் பகிர்ந்து கொண்டிருந்தார் அவர்.

அண்மையில் சில முகப்புத்தக ஊட கங்களில் இந்த நிகழ்வில் சுமந்திரன் ஆறாவது வரிசையில் ஒரு மூலையில் அமர்ந்திருக்கின்றார் என்று படத்தைக் குறிப்பிட்டு, இவரா விசேட அதிதியாக அழைக்கப்பட்டவர் என்று கேள்வியும் எழுப்பி, அதன் மூலம் என் பத்தியின் தகவலை அந்த முகப்புத்தகங்கள் நையாண்டிக்கு உட்படுத்தி இருப்பதை நான் அவதானித்தேன்.

முதல் நாள் தாமதமாக மாநாட்டுக் குச் சென்ற சுமந்திரன், அன்று மதியம் வேறு நிகழ்வில் பங்கு பற்றுவதற்காக உடனடியாக புறப்பட்டுச் செல்ல வேண்டி இருந்ததால், முன்வரிசைக்குச் செல்லா மல், தமது பிரசன்னத்தை தெரிவித்து விட்டு, சுமார் அரை மணி நேரம் பின் வரிசை ஒன்றில் அமர்ந்து விட்டு எழுந்து சென்று விட்டார் என அறிந்தேன். அதுதான் அந்தப் படம்.

இரண்டாவது நாள் மேடைக்கு முன் னால் முன் வரிசையில் அவர் அமர்ந் திருந்த படத்தை பார்த்த நினைவு எனக்கு உண்டு. ஆனால் படம் என் கைவசம் இல்லை.

அதுவல்ல விடயம். அவருக்கு வழங் கப்பட்ட அழைப்புக் கடிதத்தில் அவருக்கு முக்கிய இடம் வழங்கப்படுவதாக ஒரு வசனம் வாசித்த நினைவு எனக்கு இருந் தது. ஆகவே பழைய அந்த அழைப்புக் கடிதத்தை தேடிப்பிடித்து பார்த்தேன். சுமந்திரனுக்கு முகவரியிட்டு, விழாவில் பிரதான ஏற்பாட்டாளரான ஆணையாளர் அனுப்பிய அந்த அழைப்பிதழ் கடிதத்தின் கடைசி வசனம் ஆங்கிலத்தில் இப்படித் தான் இருந்தது:–

I request your consent to share the dias with the hon'ble Deputy chief minister of Tamil Nadu on the world Tamil Diaspora day - 2026.

இதன் மொழிபெயர்ப்பு அர்த்தம் "உலகத் தமிழர் புலம்பெயர்ந்தோர் தினம் – 2026 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சருடன் மேடையைப் பகிர்ந்து கொள்ள உங்கள் சம்மதத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்பதா கும்.

அப்படியாயின் ஏன் சுமந்திரன் மேடை யில் அமரவில்லை என்ற கேள்வி எழுகி றது. அது பற்றி அவரிடம் கேட்டேன்.

"இந்தத் திகதிகளில் எனக்கு வேறு வழக்குகள், விடயங்கள் இருந்த காரணத் தினால் அந்த வழக்குகளை ஒத்திவைக் கக் கூடிய நிலைமையை உறுதிப்படுத் தும் வரை கூட்டத்தில் பங்கு மற்றும் என் உறுதிப்பாட்டை தெரிவிக்க முடிய வில்லை. அதன் காரணமாக துணை முதலமைச்சருடன் மேடையில் அமர முடி யும் என்ற இணக்கத்தை என்னால் போதிய முன்னறிவித்தலோடு கொடுக்க முடியவில்லை. அதனால் அந்த அறிவித் தல் இணக்கத்தை நான் எழுத்தில் ஏற் பாட்டாளர்களுக்கு அறிவிக்கவும் இல்லை. மேடைக்குப் போகவும் இல்லை. இதுதான் நடந்தது. நான் மேடையில் அமர என் இணக்கத்தை முற்கூட்டியே அறிவித்திருந் தால் நிச்சயமாக மேடையில் அமர்ந்தி ருக்க முடியும்." – என்று விளக்கினார் சுமந்திரன்.

அவரது விளக்கத்தை பிரசுரிப்பது எனது நோக்கமும் தேவையையும் அல்ல. ஆனால் அவர் விசேட விருந்தி னராக அழைக்கப்பட்டுள்ளார் என்ற என் செய்தியை கிண்டல் தனமாக முகப்புத் தகத்தில் விமர்சிப்போருக்கு விளக்கம் அளிப்பதற்காக இதைத் தருகிறேன். அவ்வளவுதான்.

சுமந்திரனுக்கு அழைப்பிதழுக்கு முன்னராகக் கிடைத்த அழைப்புக் கடிதத் தில் பிரதியையும் வாசகர்கள் பார்வைக்கு இணைத்துள்ளேன்.

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

– இவ்வாறு எதிரணியின் நாடாளு மன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கிடையிலான பேச்சுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன. அவை சரியான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, வெளிநபர்களின் தலையீடு கள் தவிர்க்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அத்தியா வசியமானதாகும்.

எவ்வாறிருப்பினும் பொறுத்தமான நேரத்தில் இந்த இரு கட்சிகளும் உத்தி யோகபூர்வமாக இணைந்து பயணிக்கும்.

மாகாண சபைத் தேர்தலை இனியும் இந்த அரசால் காலம் தாழ்த்த முடியாது.

இந்தஅரசு அரசமைப்புக்குஏற்பசெயற் படுவது உண்மையெனில் இந்த வருடம் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண் டும். அவ்வாறில்லை எனில் அது அரசின் தொடர்ச்சியான பயணத்துக்குச் சிறந்த பாதையல்ல.

உண்மையில் கடந்த 3 மாதங்களுக்கு முன்னரே மாகாண சபைத் தேர்தல் நடத்தப் பட்டிருக்க வேண்டும். எதற்காக தேர்தல் நடத்தப்படவில்லை என்பது தெரியாது. அந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தலுக்கான நிதி காணப்பட்டது.

தாம் ஜனநாயக ஆட்சியைக் கொண்டு செல்வதாக இந்த அரசு கூறிக் கொண்டி ருக்கின்றது. அவ்வாறெனில் ஏன் தேர் தல் நடத்தப்படவில்லை என்பதை அரசே கூற வேண்டும்.

அரசமைப்புக்கமைய செயற்படுவதா கக் கூறிக் கொண்டிருக்கும் இந்த அரசு கணக்காய்வாளர் நாயகம் பதவிக்குப் பொறுத்தமான ஒருவரைப் பரிந்துரைக்கத் தவறியிருக்கின்றது. ஜனாதிபதியால் பரிந் துரைக்கப்படும் பெயர் அரசமைப்பு பேர வையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால் அவரால் பரிந்துரைக்கப்பட்ட 4 பெயர்கள் அரசமைப்பு பேரவையால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

கணக்காய்வுத் திணைக்களத்துக்கு வெளியிலிருந்து ஒருவரது பெயர் பரிந்து ரைக்கப்படுகின்றது என்றால், அதற்குள் அடுத்தடுத்த நிலைகளில் பொறுத்தமான வர் இல்லை என்பதே அர்த்தமாகும். இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." – என்றார்.

# புதிய கல்வி மறுசீரமைப்பு தவிர்க்க முடியாது! நாட்டின் கலாசாரத்தை புறக்கணிக்க முடியாது!!

## முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா சுட்டிக்காட்டு

"புதிய கல்வி மறுசீரமைப்பு மிகவும் அவசியம். அது எமது கலாசாரம் மற்றும் எமது நாட்டுக்கே உரிய வகையில் இடம்பெற வேண்டும். சர்வமதத் தலைவர்கள், துறைசார் நிபுணர்களுடன் இது சம்பந்தமாகக் கலந்துரையாட வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"பெற்றோர்களிடம் இருந்தும் கல்வி மறுசீரமைப்பு பற்றி ஆலோசனை பெறவேண்டும். எனவே, கல்வி மறுசீரமைப்பை ஒரே நாளில் செய்ய முடியாது. முறையாக அதற்குரிய பணி இடம்பெற வேண்டும் என்பதே எனது கோரிக்கை."

– என்றார்.



# சு.க. மீளெழுச்சிப் பயணத்தில் கடும் முடிவுகள் எடுக்கப்படும்

## சாமர சம்பத் எம்.பி. எச்சரிக்கை



"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளக் கட்டியெழுப்பும் பயணத்தின்போது கடுமையான முடிவுகளை எடுக்க நேரிடும்."

– என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"தேசிய அமைப்பாளர் பதவி என்பது சவாலான விடயமாகும். இந்தப் பதவியை வகித்துக்கொண்டு முன்னோக்கிச் செல்கையில் கட்சிக்காக வேலை செய்யக்கூடியவர்களுடன்தான் இணைந்து செல்ல முடியும்.

புகழுக்காக பதவிகளை வைத்திருப்பவர்களுடன் பயணிக்க முடியாது. எனவே, கடுமையான சில முடிவுகளை எடுக்க நேரிடும்.

அவ்வாறு முடிவுகளை எடுக்கும்போது தவறாக நினைக்க வேண்டாம் எனக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் கனவுடன் எவரும் செயற்பட முடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுமாறு கட்சியை விட்டுச் சென்றவர்களையும் அழைக்கின்றேன்." – என்றார்.

## அநுரவின் சொந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2026ஆம் ஆண்டுக்குரிய முதலாவது கூட்டத்தை ஜனாதிபதியின் சொந்த ஊரிலேயே (தம்புத்தேகம) நடத்திக் காட்டினோம்.

இக்கூட்டத்தை நடத்துவதற்குப் பல தடைகள் ஏற்படுத்தப்பட்டன. கொடி நடுவதற்குக்கூட இடமளிக்கப்படவில்லை. ஆனால் மக்கள் அணிதிரண்டு வந்து சிறந்த பதிலை வழங்கினர்.

அதேவேளை, அநுரகுமார திஸாநாயக்கதான் ஜனாதிபதி என்பதை நாம் ஏற்கின்றோம்.

அவருக்குப் பின்னால் ஜே.வி.பியினர் மற்றும் அக்கட்சியினருடன் தொடர்புடையவர்களுக்கு இந்நாட்டில் ஜனாதிபதிப் பதவிக்கு வரமுடியாது.

பொய்களை நம்பி ஏமாந்தது போதும் என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர். எனவே, நாட்டை நேசிக்கக்கூடிய ஒருவரை மக்கள் தெரிவு செய்வார்கள்." – என்றார்.

## பொறுமைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 4 பௌத்த தேரர்கள் உட்பட 9 பேர் நேற்று திங்கட்கிழமை திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது பலாங்கொட கஸ்ஸப்ப தேரருக்குச் சார்பாக சரத் வீரசேகர உட்பட பௌத்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் முன்னிலையாகியிருந்தனர்.

9 சந்தேகநபர்களுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே சரத் வீரசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பௌத்த மதம் பாதுகாக்கப்பட வேண்டும், போசிக்கப்பட வேண்டும எந்நிலையிலும் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வெண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த அரசு பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்காமல் அரசமைப்புக்கு முரணாகச் செயற்படுகின்றது.

திருகோணமலை பகுதியின் காணி உறுதிப்பத்திரம் வழங்கப்பட்ட பகுதியில் புத்தர் சிலை வைத்ததற்கு எதிராக கரையோரப் பாதுகாப்பு அதிகார சபை வழக்குத் தாக்கல் செய்துள்ளது. அவ்வாறாயின் கடற்கரையோரங்களில் உள்ள சகல சிலைகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனுராதபுரத்தைக் கடந்து யாழ்ப்பாணத்துக்குப் பௌத்த வழிபாடுகளுக்கு வருபவர்கள் மனதில் குரோதத்துடன் வருகின்றனர் என்று ஜனாதிபதி குறிப்பிட்டது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இந்த அரசு பௌத்தத்துக்கு எதிராகவே செயற்படுகிறது.

சிங்கள பௌத்தர்களின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பதை ஜனாதிபதி விளங்கிக்கொள்ள வேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும், தமிழ் அரசியல்வாதிகளை மகிழ்விப்பதற்காகவும் பௌத்த தேரர்களை நெருக்கடிக்குள்ளாக்குவதை அரசு தவிர்த்துக்கொள்ள வேண்டும். இல்லையேல் விளைவுகள் பாரதூரமானதாக அமையும்." – என்றார்.

## யாழில் எலிக்காய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடமராட்சி, அல்வாய் மேற்கு பகுதியைச் சேர்ந்த அன்னலிங்கம் அஜந்தன் (வயது 42) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருக்குக் கடந்த சனிக்கிழமை காய்ச்சல் ஏற்பட்டது. இந்நிலையில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை அவர் இரத்த வாந்தி எடுத்துள்ளார். பின்னர் காலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி சிறிது நேரத்தில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பிரித்தாளும் தந்திரம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை பிரித்தாள்வதன் மூலம் அந்தக் கட்சிக்குள் நெருக்கடியை ஏற்படுத்த ஆளும் தேசிய மக்கள் சக்தி முயற்சிக்கின்றதா என்று கேள்வி இப்போது பல மட்டங்களிலும் எழுப்பப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர், அரசமைப்பு கவுன்ஸிலில் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் கையாளாகச் செயல்படுகின்றார் என்ற நெருக்கடி கட்சிக்குள் ஏற்பட்டு பூகம்பமாய் வெடித்திருப்பது தெரிந்த விடயம்தான்.

வடக்கில் ஓர் எம்.பியை வளைத்துப் பிடித்து, அதன் மூலம் தமிழரசுக் கட்சிக்குள் இக்கட்டை ஏற்படுத்தியிருக்கும் ஆளும் தரப்பு, இப்போது அந்தக் கைங்கரியத்தை கிழக்கிலும் கனகச்சிதமாக தொடங்கியுள்ளது என்று கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் அபிவிருத்திக் குழு ஊடாக முன்மொழியப்பட்ட வீதி அபிவிருத்தி தொடர்பான முன்மொழிவுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிறிநாத்தின் முன்மொழிவுகளை தவிர ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்மொழிவுகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை எனக் கூறி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மிகப்பெரிய சர்ச்சை எழுந்துள்ளது இந்தப் பின்புலத்தில்தான் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வீதி அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் முகமாக அரசாங்கம் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர் ஊடாகவும் ஐந்து கோடி ரூபா பெறுமதியான அபிவிருத்திக்குரிய வீதிகளின் பெயர் விவரங்களை மாவட்ட அபிவிருத்திக் குழு ஊடாக தருமாறு கோரிக்கை விடுத்திருந்தது.

இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிநேசன், சாணக்கியன், சிறிநாத், ஹிஸ்புல்லா ஆகியோர் வீதிகளின் பெயர் விவரங்களை அரசாங்க அதிபரின் அனுமதியுடன் அரசாங்கத்திற்கு அனுப்பி இருந்த நிலையில், வைத்தியர் சிறிநாத்தின் முன்மொழிவுகளைத் தவிர ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்மொழிவுகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை. இதனால் கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இது குறித்து சர்ச்சைகள் ஏற்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியும் இருந்தனர்.

ஏனைய அரசாங்கங்களைப் போல இந்த அரசும் சிறுபான்மைக் கட்சிகளுக்கிடையே பிரித்தாளும் தந்திரத்தை கையாகின்றதா? தமிழரசுக் கட்சிக்குள் அரசு சார்பில் ஒருவர் இருப்பதாக ஒரு விம்பத்தை உருவாக்கி, கட்சிக்குள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு திட்டமிட்டு செயற்படுகின்றதா என்ற கேள்வி எழுகிறது.

அரசுத் தரப்பினர் விதிக்கும் வலைக்குள் தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் விழாமல் இருப்பது அவர்களின் அரசியல் மேதாவிலாசத்தைப் பொறுத்தது.

# மட்டு. நாவலடி கடற்கரையில் படப்பிடிப்பாளர்களை தாக்கிய இரு சிஐ.டியினர் உட்பட நால்வர் கைது!



**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு நாவலடி கடற்கரையில் தவறவிட்ட கமரா உள்ளிட்ட தோல் பையை தேடிச் சென்ற படப்பிடிப்பாளர்கள் மீது தாங்கள் குற்றப்புலனாய்வு பிரிவினர் என தெரிவித்து 4 பேர் கொண்ட குழு தாக்குதல் நடத்தியதில இருவர் படுகாயமடைந்தனர். அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு குற்றபுலனாய்வு பிரிவினர் (சி.ஐ.டியினர்) இருவர் உட்பட 4 பேரை நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு தாங்கள் கைது செய்துள்ளனர் எனக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது:-

மேற்படி கடற்கரைப் பிரதேசத்தில் படப்பிடிப்பாளர்கள் குழு ஒன்று கடந்த சனிக்கிழமை மாலை 3.00 மணியில் இருந்து மாலை 6.00 மணி வரை படிப்பிடிப்பில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து வெளியேறியது.

இந்த நிலையில் கமரா உள்ளிட்ட பொருள்கள் அடங்கிய பை ஒன்றை படப்பிடிப்பு இடம்பெற்ற பகுதியில் தவறுதலாக விட்டுவிட்டு சென்ற அவர்கள், அந்தப் பையை தேடியபோது அவர்கள் கடற்கரையில் விட்டுவிட்டு வந்துள்ளதாக அறிந்து கொண்டனர்.

இதனையடுத்து படப் பிடிப்பு நிறுவனத்தில் கடமையாற்றிவரும் கல்லடியைச் சேரந்த மகேஸ்வரன் யதீசன் என்பவருக்கு சம்பவ தினமான 8.00 மணியளவில தொலைபேசியில் தொடர்பு கொண்டு, கடற்கரையில் தோல் பையை விட்டுவிட்டு வந்துள்ளோம், அதனை தேடி எடுத்து வருமாறு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அந்த நபர் மோட்டார் சைக்கிளில் சென்று கடற்கரையில் ரோச் லைற் வெளிச்சத்தை பாவித்து கமரா உள்ளிட்ட தோல்பையை தேடிக் கொண்டிருந்தபோது அங்கு சி.ஐ.டியின் மட்டக்களப்பு பிரிவு காரியாலயத்தில் கடமையாற்றிவரும் சார்ஜண்ட் மற்றும் கான்ஸ்டபிளுடன் இரு இளைஞர்கள் என 4 பேர் அமர்ந்து கொண்டிருந்துள்ளனர் இவர்கள் மீது ரோச் லைட் வெளிசம் பட்டுள்ளதையடுத்து அவர்கள் குறித்த இளைஞனை கூப்பிட்டு ஏன் எங்கள் மீது ரோச் லைட் அடித்தாய் என வினவினர்.

இதன்போது அந்த நபர் உங்கள் மீது வெளிச்சம் பாய்ச்சவில்லை, நாங்கள் தவறுதலாக விட்டுவிட்டுச் சென்ற தோல் பையைத் தேடுகிறோம் தெரிவித்தபோது அவர்கள், "நாங்கள் சி.ஐ.டியின்ர். ஏண்டா ரோச் அடித்தாய்?" என கேட்டு அவர் மீது தாக்குதல் மேற்கொண்டு தடுத்து வைத்தனர். அதையடுத்துத் தாக்குதலுக்கு உள்ளானவர் அந்தப் படப் பிடிப்பாளர் நிறுவனத்தில் கடமையாற்றும் இன்னும் ஒருவருக்கு தொலைபேசியில் விடயத்தைத் தெரிவித்து அவரை அழைத்துள்ளார்.

இதனையடுத்து அழைக்கப்பட் நபர் அங்கு சென்ற போது அவர் மீதும் அந்த 4 பேர் கொண்ட குழுவினர் தாக்குதல் மேற்கொண்டனர். அவர் தமது நிறுவன உரிமையாளருக்கு தெரியப்படுத்த அவர் அங்கு சென்ற நிலையில் அவர்கள் 3 பேர் மீதும் அக்குழுவினர் தாக்குதல் நடத்தியமையை அடுத்து தாக்குதலுக்கு உள்ளானவர்கள் தமது கையடக்கத் தொலைபேசி, கைப்பை, தோல்பை, கமரா போன்ற பொருள்களை அங்கு விட்டுவிட்டு அங்கிருந்து தப்பி ஓடிச் சென்று தாக்குதலில் படுகாயமடைந்தவரை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இதன் பின்னர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை படப்பிடிப்பு நிறுவனத் தலைவர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு சென்று தமது நிறுவனத்தில் கடமையாற்றியவர்கள் மீது சி.ஐ.டி. எனத் தெரிவித்த 4 பேர் கொண்ட குழுவினர் தாக்கியுள்ளனர் என நடந்தவற்றை தெரிவித்து, அவர்களைக் கண்டால் அடையாளம் காட்ட முடியும் என முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தனர்.

தாக்குதல் மேற்கொண்டவர்கள் யார் என பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் அன்றைய தினம் மாலையில், தாக்குதலை மேற்கொண்ட சி.ஐ.டியினரான இருவரும் காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு சென்று கடற்கரையில் கைவிடப்பட்ட நிலையில் கமரா உள்ளிட்ட பொருள்களுடன் பை ஒன்று இருந்த நிலையில் அதனை மீட்டு கொண்டுவந்துள்ளனர் எனத் தெரிவித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதன்போது பொலிஸார் இரு சி.ஐ.டியினரையும் தடுத்து வைத்துக் கொண்டு முறைப்பாடு செய்தவரை வரவழைத்து அவர்களைக் காட்டினர். இவர்கள்தான் சி.ஐ.டியினர் எனக் கூறித் தங்களை தாக்கினர் என அடையாளம் காட்டியமையை அடுத்து இருவரையும் கைது செய்தமையுடன் அந்தக் குழுவைச் சேர்ந்த ஏனைய இரு இளைஞர்களையும் பொலிஸ் நிலையத்திற்கு வரவழைத்து கைது செய்துள்ளனர்.

இதில் மட்டக்களப்பில் அமைந்துள்ள சி.ஐ.டி. பிரிவுக் காரியாலயத்தில் கடமையாற்றி வரும் கம்பளை மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களை சேர்ர்ந்தவர்கள் இருவர் எனவும் மற்றும் அவர்களின் நண்பர்களான மட்டக்களப்பைச் சேர்ந்த இரு இளைஞர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் நால்வரும் நேற்றுத் திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டமையை அடுத்து அவர்களை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் நீதிவான் விடுவித்தார்.

# சாயி பாபாவின் அற்புதங்கள் கூறும் “அனந்தா” திரைப்படம்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின், 100 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, தீவிர சாயி பக்தர், புட்டபர்த்தி பிரசாந்தி நிலைய அறங்காவலர் சபை உறுப்பினர், தொழிலதிபர் கிரிஸ் கிருஷ்ண மூர்த்தி அவர்களினால் தயாரிக்கப்பட்ட ஒரு திரைப்படம் “அனந்தா.”

தயாரிப்பாளர் சத்ய சாயி பாபாவின் அற்புதங்கள் நிறைந்த சுமார் 500 கதைகளை எடுத்து, அதில் மனதை உருக்கக்கூடியதும், பலராலும் எற்றுக் கொள்ளக்கூடிய, நம்பகத்தன்மை வாய்ந்ததுமான ஐந்து கதைகளைத் தேர்ந்தெடுத்து, திரையரங்குகளில் வெற்றிகரமாக ஒடிய “பாட்ஷா” மற்றும் “அண்ணாமலை” திரைப்படங்களின் பிரபல இயக்குனர் சாயி பக்தர் சுரேஷ் கிருஷ்ணாவிடம் ஒப்படைத்தார். தேனிசைத் தென்றல் தேவா இசையமைப்பில், பா.விஜய்யின் ஆன்மீகக் கருத்துமிக்க பாடல்கள், வசன உரையாடலுடன், கலா மாஸ்டரின் நடன அமைப்புடன் திரைப்படம் அமைந்துள்ளது.

ஐந்து குடும்பங்களில் நடக்கும் சுவையான கதையை, சுவாரஸ்யமாக தொகுத்து, நிழல்கள் ரவி “வாசுதேவன்” என்ற கதாபாத்திரத்தில் கொண்டு செல்லும் காட்சிகள் மனதைத் தொடுகின்றது. தன் மனைவிக்கு ஏற்பட்ட நிகழ்வை நினைத்து, வை.ஜீ. மகேந்திரன் ஏற்று நடிக்கும் கதாபாத்திரம் மனதை உருக்கியது மட்டுமல்ல, கண்ணீரை வரவழைக்கிறது. அந்த கதாபாத்திரம் வழியாக சொல்லப்படும் கருத்து, சத்ய சாயி பாபாவின் பக்தர்களுக்கு மட்டுமல்ல, அவரவர் தெய்வங்களை வழிபடும் அனைவருக்கும் எற்றுக்கொள்ளக் கூடியது.




படத்தின் ஆரம்பத்ததில் பக்தர்களை புட்டபர்த்திக்கு அமைத்துச் செல்லுகிறார் இயக்குநர். பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின், 100 ஆவது பிறந்த நாள் நிகழ்ச்சிகள், புட்டபர்த்தியில் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி நடைபெற்றபோது, அதனை சென்று பார்க்க முடியாத பக்தர்களுக்கு, ஒரு போனஸ் இந்தப்படத்தில் கிடைத்தள்ளது.

இந்தத் திரைப்படம் சென்றவாரம், தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு, ஐந்து இந்திய மொழிகளில், இந்திய திரையரங்குகளில் வெளியீடு செய்யப்பட்டது. இலங்கையிலுள்ள சாயி பக்தர்கள் மட்டுமல்ல அனைவரும் இப்படத்தினை அனுபவிக்க வேண்டும் என்ற காரணத்தினால், கொழும்பு சாயி நிலையத்தின் தலைவர் திரு.உதய நாயகம் அவர்கள், அப்படத்தின் தயாரிப்பாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்களை, “ஸ்ரீ சத்ய சாயி யுகம்” திரு.எம்.எஸ். ஜெய் கிருஷ்ணா அவர்களின் மூலமாகத் தொடர்புகொண்டு, கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள, சாயி நிலையத்தில் திரையிட முயற்சி எடுத்தார்.

பகவானின் ஆசிகளுடன், சாயி அன்பர் Superlight Consolidated தொழில் அதிபர் ரவீந்திரன் அவர்களது அனுசரணையில் மிக பெரிய டிஜீட்டல் திரையில் ஒளி ஒலி அமைப்புடன் “அனந்தா” திரைப்படம், வருகின்ற ஞாயிறுக்கிழமை, 25 ஆம் திகதி, காலை 9.30 மணியளவில் கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள, சாயி நிலையத்தில் திரையிடப்படவுள்ளது. அனைவரும் கலந்துகொள்ள ஏற்பாடாகியுள்ளது.

# கோட்டை - கொம்பெனித்தெருவை இணைக்கும் மேம்பாலம் மக்கள் பயன்பாட்டிற்காக கையளிப்பு

கொழும்பு கோட்டையையும் கொம்பெனித்தெருவையும் இணைக்கும் இந்த மேம்பாலம் மக்கள் பயன்பாட்டிற்காக நேற்று கையளிக்கப்பட்டது.

பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கப்படும் இந்த செயற்றிட்டத்திற்கான செலவு 3.1பில்லியன் ரூபா ஆகும்.

கொம்பனித்தெரு ரயில் கடவையில் நீண்டகாலமாக காணப்பட்ட வாகன நெரிசலுக்கான தீர்வாக இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஒருவழிப் போக்குவரத்தை மாத்திரம் முன்னெடுக்கும் வகையிலுள்ள இந்த பாலம் இரண்டு வீதிகளை கொண்டுள்ளது.



போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கொழும்பு மேயர் விராய் கெலி பல்தஸார் ஆகியோரின் தலைமையில் இந்த மேம்பாலம் திறந்து வைக்கப்பட்டது.



# புல்லாவெளி செபஸ்தியார் ஆலய நற்கருணைப் பெருவிழா

(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய நற்கருணை பெரு விழா நேற்று இடம் பெற்றது.

கட்டைக்காடு பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் தலைமையில் நேற்று மாலை 5.00 மணியளவில் திருச்செபமாலையுடன் நற்கருணைப் பெருவிழா ஆரம்பமானது.

நற்கருணை திருப்பலியை அருட்தந்தை எட்வின் நாதன் ஒப்புக் கொடுத்தார்.

புல்லாவெளி புனித செபஸ்தியார் நற்கருணை பெருவிழாவில் அருட்தந்தையர்களான நிக்சன் கொலின் அடிகளார், மரியதாஸ் அடிகளார், ப்ராயன் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டமையுடன் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர்

இன்று காலை 7.00 மணியளவில் புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய பெருவிழா இடம்பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்புக் கடமைகளில் மருதங்கேணிபொலிஸார்ஈடுபட்டுவருகின்றனர்.













# அம்புலுவாவ மலையடிவார பகுதிக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுப்பு

மண்சரிவு மற்றும் கற்பாறைகள் சரியும் அதி அபாயம் நிலவும் பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளதால் கம்பளை அம்புலுவாவ மலை அடிவாரத்திலுள்ள 23 வீடுகளைச் சேர்ந்தவர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் பரிந்துரைத்துள்ளது.

அதி ஆபத்து நிலவும் வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளில் கட்டுமானப் பணிகள் அல்லது அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடாது என்பதுடன் இந்தப் பகுதிகள் மிகவும் உணர்திறன் வாய்ந்த பகுதிகளாக கருதி பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் பரிந்துரைத்துள்ளது.

டித்வா புயலை அடுத்து கம்பளை அம்புலுவாவ மலைப்பிரதேசத்தை அண்மித்து மண்சரிவு மற்றும் கற்பாறைகள் சரியும் அபாயம் தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் டிசம்பர் 19 ஆம் திகதி கள ஆய்வினை முன்னெடுத்தது.

அது தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் இதுவரை உடபலாத்த பிரதேச செயலாளரிடம் 03 அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது.

அம்புலுவாவ மலைப் பகுதியில் 03 இடங்கள் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் மேலும் 23 வீடுகளை மத்திய ஆபத்துள்ள இடங்களாக அடையாளம் கண்டுள்ளது.

மழை வீழ்ச்சியின் அளவு 75 மில்லிமீற்றருக்கு அதிகமாக காணப்பட்டால் சம்பந்தப்பட்ட வீடுகளில் வசிப்பவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதுடன் 24 மணித்தியாலங்களுக்குள் 100 மில்லிமீற்றருக்கு அதிகமாக மழை வீழ்ச்சி பதிவானால் அவதானத்துடன் இருக்க வேண்டும் என நிறுவகத்தின் முன்கூட்டிய எச்சரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

24 மணித்தியாலங்களில் 150 மில்லிமீற்றருக்கு அதிகமாக அல்லது மணித்தியாலத்திற்கு 75 மில்லிமீற்றருக்கு அதிகமாக மழைவீழ்ச்சி கிடைத்தால் சம்பந்தப்பட்ட வீடுகளில் வசிப்பவர்கள் தற்காலிகமாக வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மண்சரிவு மற்றும் கற்பாறை சரிவுகளுக்கு மத்திய ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் கம்பளை ஜினராஜ ஆண்கள் வித்தியாலயம் மற்றும் ஜினராஜா மாதிரி ஆரம்ப பாடசாலை ஆகியன அமைந்துள்ளன.

கடந்த வருடம் நவம்பர் 27 ஆம் திகதி ஜினராஜ வித்தியாலயத்தின் ஆசிரியரொருவர் அம்புலுவாவ மலையிலிருந்து நீர் மற்றும் பாறைகளால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

பின்னர் அவரது சடலம் ஜினராஜ ஆண்கள் வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் மண்ணில் புதையுண்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

கம்பளை ஜினராஜ வித்தியாலயம் மற்றும் ஜினராஜ மாதிரி ஆரம்ப பாடசாலை ஆகியவை மத்திய ஆபத்துள்ள பகுதிகளாகக் கருதப்பட வேண்டும் என 02 பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக உடபலாத்த பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக நட்டஈடாக 50 லட்சம் ரூபா வழங்கப்படுகிறது



இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக அனர்த்தங்களால் முற்றாக சேதமடைந்த வீடுகளுக்கான நட்டஈடாக 50 லட்சம் ரூபா வழங்கப்படுவதாக பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

பதுளை – ஸ்பிரிங்வெலி தோட்டத்திற்கு செல்லும் வீதிக்கு கார்பர்ட் இடும் பணிகளின் ஆரம்ப நிகழ்வில் கலந்துக் கொண்ட போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

பெருந்தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகளில் இருந்த மக்களுக்கு 10 பேர்சஸ் காணி வழங்கி 550 சதுர அடியில் வீடும் கட்டிக்கொடுப்போம். அதனையும் செய்வோம். அதற்கும் தயாராகவுள்ளோம் எனவும் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.




# தேசிய கல்வி நிறுவக பிரதி பணிப்பாளர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டார்

தரம் 6 ஆங்கில பாடத்திட்டம் தொடர்பான சர்ச்சை தொடர்பாக தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக தேசிய கல்வி நிறுவகத்தின் மேலும் இரு அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குறுகிய அரசியல் நலனை விடுத்து நாட்டை நவீனமயமாக்க வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றி, குறுகிய அரசியல் நலன்களில் கவனம் செலுத்துவதை விடுத்து நாட்டை நவீனமயமாக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இளைஞர் அணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இளைஞர் மாநாட்டின் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என்றும், நமது கலாசாரம் மற்றும் மதத்தைப் பாதுகாக்கும் அதேவேளையில் நவீன உலகிற்கு ஏற்றவாறு இளைஞர்களைத் தயார்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டை நவீனமயமாக்குவது என்பது நமது கலாசாரம், மதம் மற்றும் பாரம்பரியங்களை அழிப்பதாக அமையக் கூடாது. தேசிய அடையாளத்தைப் பாதுகாத்துக்கொண்டே நாம் நவீனத்துவத்தை நோக்கி நகர வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் இளைஞர்களின் பங்களிப்பு முக்கியமானது என அவர் வலியுறுத்தினார்.

இலங்கையிலும் உலக அளவிலும் வரலாற்றில் இடம்பெற்ற முக்கிய அரசியல் மற்றும் சமூகப் போராட்டங்களுக்கு இளைஞர்களே தலைமை தாங்கியுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம், தேசிய ஒற்றுமை அல்லது சமீபத்திய அரசியல் போராட்டங்கள் என அனைத்து முக்கிய நிகழ்வுகளிலும் இளைஞர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர்.

ஒரு நாடு பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது, அதன் பாதிப்பை இளைஞர் சமூகமே அதிகம் அனுபவிப்பதாகவும் அவர் கூறினார்.

மேலும் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் நீண்டகால தேசிய அபிவிருத்தி குறித்துச் சிந்திக்காமல், குறுகிய கால அரசியல் இலக்குகளை மட்டுமே கொண்டுசெயற்படுவதாக அவர் விமர்சித்தார்.

அத்துடன் எதிர்வரும் 20 முதல் 30 ஆண்டுகளுக்கான தொலைநோக்குப் பார்வையை நாடு தயார் செய்ய வேண்டும் என்றும், இலங்கையை முன்னோக்கி எடுத்துச் செல்ல இளைஞர்களுக்கு உரிய வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம்

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்வரும் ஜனவரி 23ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் சமில் விஜேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்மொழியப்பட்டுள்ள 2026 பாதீட்டுத் திட்டத்தில், வைத்தியர்கள் மற்றும் சுகாதாரத் துறையினர் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படவில்லை.

இதற்கு முன்னர் ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து வேலைநிறுத்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும், வாக்குறுதி அளிக்கப்பட்டபடி மேலதிக பேச்சுவார்த்தைகள் நடைபெறவில்லை என்பதுடன், எட்டப்பட்ட உடன்பாடுகளும் நிறைவேற்றப்படவில்லை.

சுகாதாரத்துறையில் நிலவும் அதிருப்தி காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் விஜேசிங்க சுட்டிக்காட்டினார்.

மருத்துவத் துறையினர் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு முறையான மற்றும் அர்த்தமுள்ள தீர்வுகள் கிடைக்கும் வரை இந்த வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அடக்குமுறையை மீண்டும் உருவாக்கும்

## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் விமர்சனம்




இலங்கையில் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அல்லது உத்தேச அரசை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டம் குறித்து, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தமது விமர்சனத்தை வெளியிட்டுள்ளது

2025 டிசம்பரில் நீதி அமைச்சினால் வெளியிடப்பட்ட இந்த யோசனை தற்போதைய சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு மாற்றாகக் கொண்டுவரப்படவுள்ளது.

ஆனால், இந்தப் புதிய சட்டத்திலும் பழைய சட்டத்தைப் போன்றே மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கும் ஆபத்தான பிரிவுகள் இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

இந்த யோசனையில், பயங்கரவாதம் என்பதற்கான விளக்கம் மிகவும் விரிவாகவும், தெளிவாக இல்லாமலும் உள்ளது. இது அரசியல் செயல்பாடுகள் மற்றும் அமைதியான போராட்டங்களை முடக்குவதற்குப் பயன்படுத்தப்படலாம்.

அத்துடன், அரசாங்கத்தை வற்புறுத்துதல் அல்லது மக்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தல் போன்ற பொதுவான செயல்களும் பயங்கரவாதமாகக் கருதப்பட வாய்ப்புள்ளது.

ஒரு சந்தேக நபரை ஒரு வருடம் வரை நீதிமன்ற விசாரணையின்றித் தடுப்புக்காவலில் வைக்க இந்தப் புதிய சட்டம் அனுமதி அளிக்கிறது.

பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவின் பேரில், இந்தத் தடுப்புக்காவலை இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கவும் முடியும்.

இராணுத்தினர் பிடியாணை இன்றி யாரையும் நிறுத்தவும், சோதனையிடவும், கைது செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இராணுவத்திற்குப் பயங்கரவாதத் தடுப்புப் பணிகளில் இத்தகைய அதிகாரங்களை வழங்குவது துஷ்பிரயோகங்களுக்கு வழிவகுக்கும் என்று கூறப்படுகிறது.

தவறான அல்லது பயங்கரவாதத்தைத் தூண்டும் வகையிலான தகவல்களைப் பரப்புகிறார்கள் என்ற பெயரில் ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த யோசனை வழி வகுக்கிறது.

குறிப்பிட்ட இடங்களைப் தடை செய்யப்பட்ட இடங்கள் என அறிவிக்க முடியும். அத்துடன் அங்கு புகைப்படம் எடுத்தால் 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

இந்த நிலையில், இலங்கை அரசு சர்வதேச அமைப்புகளுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைகளுக்காக அளித்த மனித உரிமைவாக்குறுதிகளைஇந்தச்சட்டம்மீறுவதாகவும் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது

இதேவேளை, தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நிறுத்தி வைக்கவும், புதிய சட்டத்தை உருவாக்கும்போது பொது மக்கள் மற்றும் நிபுணர்களின் கருத்துக்களை உள்வாங்கி, மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அதனை மாற்றியமைக்க வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.




# ‘டித்வா’ இழப்பீடு வழங்கும் செயற்திட்டத்தில் இருந்து விலகி செயற்பட கிராம உத்தியோகத்தர்கள் தீர்மானம்

டித்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு 5 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கும் செயற்திட்டத்தில் இருந்து விலகி செயற்படுவதற்கு கிராம உத்தியோகத்தர்கள் தீர்மானித்துள்ளனர்.

இழப்பீடு வழங்கும் முறையில் நிலவும் குறைபாடுகள் காரணமாக இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அனர்த்தங்களினால் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு 5 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கும் செயற்திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

இதற்கமைய இழப்பீட்டை வழங்கும் போது கிராம உத்தியோகத்தர்களே நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையிலேயே, டித்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு 5 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கும் செயற்திட்டத்தை தாங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மனுஷ நாணயக்கார தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு தள்ளுபடி

## உயர் நீதிமன்றம் உத்தரவு



முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு மீளப் பெறப்பட்டுள்ளது.

முன்னதாக, கொரியாவுக்கான ஈ 8 விசா ஒப்பந்தங்கள் தொடர்பான விசாரணையில், முறையான நடைமுறைகளைப் பின்பற்றாமல் தம்மைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி, மனுஷ நாணயக்கார இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அதனைத் திரும்பப் பெறுவதற்கு மனுஷ நாணயக்காரவின் சட்டத்தரணிகள் அனுமதி கோரினர்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதியரசர்களான எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு மனுவைத் தள்ளுபடி செய்தது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சார்பில் முன்னிலையான மேலதிக மன்றாடியார் லக்மாலி கருணாநாயக்க, இந்த மனுவைப் பராமரிக்க முடியாது எனக் கூறி ஆரம்பத்திலேயே ஆட்சேபனைகளை முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பருத்தித்துறையில் இடம்பெற்ற ‘தாதியர் சங்கமம் 2025’ நிகழ்வு

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தாதியர்கள் ஒன்றுகூடும் “தாதியர் சங்கமம் - 2025“ நிகழ்வு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள் நலன்புரி சங்க தலைவர் இ.இராகவன் தலைமையில் சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை சூரியமகால் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில் மத்திய சுகாதார அமைச்சின் மேனாள் தாதிய கல்விப் பணிப்பாளர் திருமதி வல்லிபுரநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ் தாதிய கல்லூரி அதிபர் எஸ்.ஜெயக்குமார், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தாதியர் பரிபாலகி திருமதி முரளிதரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உளநல பிரிவை சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் உமாசுதன், பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் சிறி பாஸ்கரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் பங்கேற்று சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வில், கலை நிகழ்வுகள், விழிப்புணர்வு நாடகம் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. இதன்போது தாதிய பட்டதாரிகள், கல்வியில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், கலை நிகழ்வுகளில் பங்கேற்றவர்கள் மற்றும் நிகழ்வு அனுசரணையாளர்களுக்கு நினைவு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை ஆதார வைத்தியாசாலையில் பணிபுரியும் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் என பலரும் பங்கேற்றிருந்தனர்.



# விஜய்யிடம் 6 மணி நேரம் சி.பி.ஐ. விசாரணை; குற்றப்பத்திரிகையில் பெயர் சேர்க்க வாய்ப்பு



டில்லி சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் நேற்று ஆஜரான த.வெ.க. தலைவர் விஜய்யிடம் 6 மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டது. பெப்ரவரியில் தாக்கல் செய்யப்பட உள்ள குற்றப்பத்திரிக்கையில் விஜய் பெயரும் சேர்க்கப்பட வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

கரூர் சம்பவம் தொடர்பாக த.வெ.க. தலைவர் விஜய் டில்லி சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் கடந்த 12 ஆம் திகதி ஆஜரானார். அப்போது அவரிடம் சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் 19 ஆம் திகதி ஆஜராக அழைப்பாணை அனுப்பியதைத் தொடர்ந்து நேற்று காலை மீண்டும் அவர் ஆஜரானார். காலை 10.30 மணிக்கு விசாரணை தொடங்கியது. கூட்ட நெரிசல் தொடர்பாக அதிகாரிகள் அடுக்கடுக்காக கேள்விகளை எழுப்பினர்.

குறிப்பாக, கூட்டம் கட்டுக்கடங்காமல் போனபிறகும்ஏன்உரையைத்தொடர்ந்தீர்கள், தாமதத்துக்கு திட்டமிட்ட காரணம் ஏதும் உண்டா, தாமதமாகும் தகவலை மக்களுக்கு ஏன் அறிவிக்கவில்லை, பொலிஸார் கொடுத்த பாதுகாப்பு வழிமுறைகள் மீறப்பட்டதா என்பது உட்பட பல்வேறு கேள்விகளை அதிகாரிகள் எழுப்பினர். அதற்கு விஜய் விளக்கம் அளித்தார் என தெரிகிறது.

"பொலிஸ் வழங்கிய அனைத்து பாதுகாப்பு நெறிமுறைகளையும் முறையாக பின்பற்றினேன். ஆனால், கூட்டத்தை கட்டுப்படுத்த போதிய அளவில் பொலிஸார் நியமிக்கவில்லை' என்று விஜய் கூறினார் என தெரிகிறது.

சில கேள்விகளுக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க விஜய் தரப்பில் கூடுதல் அவகாசம் கேட்கப்பட்டதால், அவர் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப் படலாம் என்றும் தெரிகிறது. விசாரணை மாலை 4.30 மணிக்கு நிறைவடைந்தது. பின்னர் அங்கிருந்து விஜய் புறப்பட்டார்.

பெப்ரவரியில் இந்த வழக்கின் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய சி.பி.ஐ. தீவிரம் காட்டி வருகிறது. குற்றப்பத்திரிகையில் விஜய் பெயரும் சேர்க்கப்பட அதிக வாய்ப்பு உள்ளதாக சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து சி.டி.ஆர். நிர்மல்குமார் டில்லியில் கூறும்போது,

"விஜய்யிடம் விசாரணை முடிந்தது. இனி அழைப்பாணை மன் எதுவும் இல்லை. அவரது பிரச்சாரம் திட்டம் தொடர்பான தகவல் களை சிபிஜ கேட்டு தெரிந்து கொண்டது. குற்றப்பத்திரிகையில் விஜய் பெயர் இடம்பெறுவது, கைது என ஊடகங்களில் பரவி வரும் தகவல் முற்றிலும் தவறு. இவை அனைத்தும் தி.மு.கவால் பரப்பப்படும் வதந்தி." என்றார்.

# பா.ஜ.க. தேசிய தலைவராக நிதின் நபின் பதவியேற்றார்



பா.ஜ.க. தேசியத் தலைவராக நிதின் நபின் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார். டில்லியில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் பிரதமர் மோடி முன்னிலையில் அவர் நேற்று பதவியேற்க உள்ளார்.

பா.ஜ.கவின் 11 ஆவது தேசியத் தலைவராக ஜே.பி.நட்டா கடந்த 2020 ஜனவரி 20ஆம் திகதி பொறுப்பேற்றார். பதவிக் காலம் முடிந்த போதிலும், சில காரணங்களால் அவருக்கு பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்த சூழலில், பிஹார் மாநில அமைச்சராக இருந்த நிதின் நபின் (வயது 45), கட்சியின் செயல் தலைவராக கடந்த மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதையடுத்து, அமைச்சர் பதவியை அவர் இராஜினாமா செய்தார்.

இதற்கிடையே, கடந்த சில மாதங்களாகபா.ஜ.கவில்உள்கட்சித்தேர்தல் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக 12 ஆவது தலைவரை தேர்ந்தெடுப் பதற்கான தேர்தல் ஜனவரி 20 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கான வேட்புமனு நேற்று முன்தினம் பெறப்பட்டது. இப்போதைய பா.ஜ.க. தலைவர் ஜே.பி.நட்டா, மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் நிதின் நபின் சார்பில் வேட்புமனுவை தேர்தல் அதிகாரி கே.லட்சுமணிடம் வழங்கினர். அப்போது மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, நிதின் கட்கரி, தர்மேந்திர பிரதான், புபேந்திர யாதவ், கிரண் ரிஜிஜு உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

பின்னர், அருணாச்சல பிரதேச முதல்வர் பெமா காண்டு உள்ளிட்ட மாநிலத் தலைவர்கள் நிதின் நபின் சார்பில் மேலும் ஒரு தொகுப்பு மனுக்களை தாக்கல் செய்தனர். பா.ஜ.க. ஆளும் மாநில முதல்வர்கள் யோகி ஆதித்யநாத், புஷ்கர் சிங் தாமி, நயாப் சிங் சைனி, பிரமோத் சாவந்த் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். இதுபோல, பிஹார், ஆந்திரா, மகாராஷ்டிரா, அசாம், ஜார்க்கண்ட் உள்ளிட்ட இதர மாநில பா.ஜ.க. தலைவர்களும் நிதின் நபின் சார்பில் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

மனு தாக்கல் முடிந்ததை அடுத்து, கட்சியின் தேசிய தேர்தல் அதிகாரி லட்சுமண் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: நாடு முழுவதும் உள்ள 36 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் பா.ஜ.க. தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் தேர்தல் நடந்து வருகிறது. இதில் 50 சதவீத மாநில தேர்தல் முடிந்ததும் தேசியத் தலைவர் தேர்தலை நடத்தலாம் என்பது கட்சி விதி. அதன்படி, 30 மாநில தலைவர் தேர்தல் முடிந்த நிலையில், தேசிய தலைவர் தேர்தலுக்கான நடைமுறைகள் தொடங்கின.

கடந்தஜனவரி16ஆம்திகதி இதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டது. வாக்காளர் பட்டியலும் வெளியிடப்பட்டது. 19ஆம் திகதி மதியம் 2 மணி முதல் 4 மணி வரை வேட்புமனுக்கள் பெறப்பட்டன. இதில், இப்போதைய செயல் தலைவர் நிதின் நபின் சார்பில் மொத்தம் 37 மனுக்கள் பெறப்பட்டன. அவை அனைத்தும் உரிய படிவத்தில் முறையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள, செல்லத்தக்க மனுக்கள் என்று பரிசீலனையில் கண்டறியப்பட்டது.

வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான கால அவகாசம் முடிவடைந்த நிலையில், பா.ஜ.க. அமைப்புத் தேர்தலில் கட்சியின் தேசியத் தலைவர் பதவிக்கு நிதின் நபின் பெயர் மட்டுமே முன்மொழியப்பட்டுள்ளது. எனவே, அவர் போட்டியின்றி தேர்வு செய்யப்படுகிறார் என கூறப் பட்டுள்ளது.

பா.ஜ.கவைப் போலவே நிதினுக்கும் 45 வயது. கட்சியின் தேசியத் தலைவர் பதவியை இளம் வயதில் எட்டிப் பிடித்த முதல் தலைவர் என்ற பெருமையும் இவருக்கு கிடைத்துள்ளது. டில்லியில் உள்ள பா.ஜ.க. தலைமையகத்தில் இன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும் நிகழ்ச்சியில் கட்சித் தலைவராக நிதின் நபின் பதவியேற்றுக் கொள்கிறார். இந்த நிகழ்ச்சியில், பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள், அமித் ஷா, ராஜ்நாத் சிங் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்க உள்ளனர்.

# ஜப்பான் நாடாளுமன்றம் கலைப்பு: பெப்ரவரி 8 இல் பொதுத்தேர்தல்!



ஜப்பானின் முதல் பெண் பிரதமரான சானா டகாயிச்சி, தனது ஆட்சியின் மீதான மக்கள் செல்வாக்கை உறுதிப்படுத்தும் நோக்கில் முன்கூட்டியே தேர்தலை நடத்தத் தீர்மானித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் அமுலாகும் வகையில் ஜப்பானின் கீழ் சபையை கலைக்க பிரதமர் திட்டமிட்டுள்ளார்.

அதற்கமைய, பெப்ரவரி 8 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தியோக பூர்வ பிரசாரங்கள் ஜனவரி 27ஆம் திகதி முதல் ஆரம்பமாகும்.

தாம் பிரதமராக இருக்கத் தகுதியானவரா என்பதை இறையாண்மை கொண்ட மக்களே தீர்மானிக்க வேண்டும் என விரும்புகிறேன் என்று அவர் டோக்கியோவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சானா டகாயிச்சி தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் கட்சியின் தொடர் தோல்வி உள்ளிட்ட காரணங்களால்முன்னாள்பிரதமர்ஷிகெருஇஷிபா கடந்த ஒக்டோபர் மாதம் பதவி விலகியத தொடர்ந்து, நாடாளுமன்றத்துக்கு நடத்தப்பட்ட பெரும்பான்மையை தீர்மானிக்கும் வாக்கெடுப்பின் மூலம் டகாயிச்சி பிரதமராக தெரிவுசெய்யப்பட்டார்.

அவருக்கு 60 வீதம் முதல் 80 வீதம் வரையிலான அதிகப்படியான மக்கள் ஆதரவு உள்ளது. இருப்பினும், அவரது கட்சியான லிபரல் ஜனநாயக கட்சி மீதான ஆதரவு சற்று குறைவாகவே காணப்படுகிறது.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு மற்றும் விலைவாசி உயர்வு ஆகியவை வாக்காளர்களின் முக்கிய கவலையாக உள்ளன. உணவுப் பொருட்களுக்கான வரி விலக்கு போன்ற வாக்குறுதிகளை வழங்கி மக்களின் ஆதரவைத் திரட்ட அவர் முயன்று வருகிறார்.

தாய்வான் விவகாரத்தில் சீனாவுக்கு எதிராக டகாயிச்சி எடுத்த கடுமையான நிலைப்பாடு, ஜப்பான் – சீனா உறவுகளில் பெரும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. அதேசமயம் அமெரிக்காவுடன் அவர் நெருக்கமான உறவைப் பேணி வருகிறார்.

ஜப்பானின் “இரும்புப் பெண்மணி” என்று அழைக்கப்படும் சானா டகாயிச்சி, முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் தீவிர ஆதரவாளர் ஆவார்.

தற்போது ஜப்பானிய நாடாளுமன்றத்தில் அவரது கூட்டணிக்கு மிகக் குறைந்த பெரும்பான்மையே உள்ளது. இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மையுடன் வலுவான ஆட்சியை அமைக்க அவர் திட்டமிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து “மத்தியவாத சீர்திருத்தக் கூட்டணி” என்ற அமைப்பை உருவாக்கியுள்ளதால், இந்தத் தேர்தல் டகாயிச்சிக்கு ஒரு கடும் சோதனையாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

# சிலியில் பரவி வரும் காட்டுத்தீ; அவசரகால நிலை பிரகடனம்









சிலி நாட்டின் தலைநகரான சான்டியாகோவின் தெற்குப் பகுதிகளில் வேகமாகப் பரவி வரும் காட்டுத்தீயினால் இது வரையில்குறைந்தது16பேர்உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நிலைமையின் தீவிரத்தைக் கருத்திற்கொண்டு, பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிலி ஜனாதிபதி உடனடியாக அவசரகால அனர்த்த நிலைமையை அறிவித்துள்ளார்.

மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தவும், மேலதிக இராணுவ மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரை ஈடுபடுத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காட்டுத்தீ குடியிருப்புப் பகுதிகளுக்குள் ஊடுருவி வருவதால், சுமார் 20,000 இற்கும் மேற்பட்ட மக்கள் அவர்களது வீடுகளிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நூற்றுக்கணக்கான வீடுகள் மற்றும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்புகள் தீக்கிரையாகியுள்ளன.

அதிக வெப்பம் மற்றும் பலத்த காற்று காரணமாக தீயைக் கட்டுப்படுத்துவதில் தீயணைப்பு வீரர்களுக்கு பெரும் சவால்கள் ஏற்பட்டுள்ளன.

விமானம் மற்றும் வானூர்தி மூலம் தீயை அணைக்கும் முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள்- 20.01.2026




இன்று செழிப்பாக இருக்க நீங்கள் கடுமையாக முயற்சிக்க வேண்டும். இன்று நல்ல பலனடைய அதிர்ஷ்டமான நாள். விரைந்து முடிவெடுத்தல் மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் இது சாத்தியம். இந்து மகிழ்ச்சி கரமான நாளாக இருக்கும்.

இன்று பணியிடத்தில் திருப்தி காணப்படும். உங்கள் திறமைகளை நிரூபிப்பதற்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கும் இடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். இன்று உங்களுக்கு ஊக்கத் தொகை போன்ற வகையில் விரைவாகப் பணம் கிடைக்கும்.




உங்கள் லட்சியங்களை அடைய இன்று சாதகமான நாள். இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பது நல்ல பலனைத் தரும்.

புதிய வாய்ப்புகள் உங்களுக்கு நல்ல பலன் தரும். உங்கள் பணிகளை முடிக்க ஏதுவான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையோடு பழகுங்கள். உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் முக்கியமான விழா பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி இன்று ஸ்திரமாக இருக்கும். சேமிப்பின் மூலம் உங்கள் நிலை உயரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திருப்தியான மன நிலை காரணமாக நல்ல உடல் நிலை காணப்படும்.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்றைய கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க தேவையான ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் மனதை ஆன்மீகத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் சில சவால்கள் காணப்படும். ஆனால் திட்டமிட்டு செயலாற்றினால் சமாளிக்கலாம். ஈடுபாட்டுடன் பணி செய்தால் சிறந்த பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உரையாடும் பொழுது கவனம் தேவை. உங்கள் பிரியமானவருடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று பற்றமான சூழ்நிலை காணப்படும். பொறுமையுடனும் உறுதியுடனும் நீங்கள் சமாளிக்க வேண்டும். விஷயங்கள் உங்கள் கட்டுப்பாட்டை மீறிக் காணப்படும். அமைதியான அணுகுமுறை கொண்டு கையாள வேண்டும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற இயலாது. சகபணியாளர்கள் ஒத்துழைக்க தவறுவார்கள். மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்காது.

உங்கள் துணையிடம் வன்மையான போக்கை காண்பித்து கடுமையாகப் பேசுவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய போக்கை கைவிட வேண்டும்.

வரவை விட செலவு அதிகமாக இருக்கும். நிதிநிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் வங்கியிருப்பை பராமரிப்பது கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. முதுவலியால் நீங்கள் அவதியுற நேரலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

இன்று வளர்ச்சி காணப்படுகின்றது. பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். திட்டமிடுவதன் மூலம் திறமையாகப் பணியாற்றலாம்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கு மிடையிலான உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் தேவைகளை சமாளிக்க சிறிய அளவிலான கடன்கள் வாங்குவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது.




உங்கள் இலட்சியங்களை அடைவதற்கு இன்று சாதகமான நாள். இன்றைய நாளின் செயல்களை நீங்கள் எச்சரிக்கையுடனும் விவேகத்துடனும் செய்வீர்கள். சமயோஜித புத்தியின் மூலம் செயல்படுவதால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

பணியின் செயல்திறனில் வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அர்ப்பணிப்புடன் பழகுவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை காரணமாக உறவில் மகிழ்ச்சி நிலவும். உங்களின் கடின உழைப்பின் மூலம் .ஊக்கத் தொகை மற்றும் சலுகை வகையில் சில கூடுதலான பணம் பெறுவீர்கள்.




உங்களிடம் அமைதியின்மை மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும். என்றாலும் வெற்றி பெற நீங்கள் உற்சாகமாக முயல வேண்டும்.

உங்கள் மதிப்பை உங்கள் மேலதிகாரிகளிடம் நிரூபிக்க வளரச்சியை உண்டாக்கும் புதுமையான யோசனைகள் தேவை. இன்று பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படக் கூடாது. நல்லுறவைப் பராமரிக்க சகஜமான அணுகுமுறையும் அனுசரித்து நடந்து கொள்ளவும் வேண்டும்.

குடும்பத் தேவைக்காக நீங்கள் செலவு செய்ய நேரும். அது தேவையற்ற செலவாக இருக்கும். அதிக செலவு காரணமாக சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.




இன்று நன்மை தீமை எனப் பலன்கள் கலந்து காணப்படும். இன்று நிச்சயமற்ற தன்மை காணப்படும். முயற்சியில் வெற்றி பெறுவதற்கு மிகுந்த பொறுமை அவசியம்.

இன்று கவனக் குறைவு காணப்படும். உங்கள் செயல் திறன் மந்தமாக இருக்கும். பனியின் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது சகஜமாக இருக்க வேண்டும். அவரி கருத்துக்களை கவனமாக கேட்பதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

செலவினங்கள் அதிகமாக காணப்படும். பாதுகாப்பிற்காக சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.உணவு முறையில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள்- 20.01.2026




இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இது உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

பணப்புழக்கம் அபரிமிதமாக இருக்கும். சுப நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் இலக்குகளை அடைய கடுமையாகப் போராட வேண்டும். திட்டமிட்டு நம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும். அஞ்சாத மன ஆற்றலும் நம்பிக்கையும் கொண்டால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று நீங்கள் பொறுமையுடன் செயற்பட்டால் உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்ற இயலும். உங்களுக்கு கொடுக்கப்பட பணிகளைச் செய்யும் போது யோசித்து சிறப்பாக ஆற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை காரணமாக தம்பதியரிடையே கருத்து வேறுபாடு காணப்படும். எனவே நட்பு முறையோடு அணுகினால் நல்லுறவைப் பராமரிக்கலாம்.

இன்று ஏற்படும் கூடுதல் செலவு காரணமாக உங்களுக்கு வருத்தம் ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. செலவுகளை கண்காணியுங்கள். கண்களில் பிரச்சினைகள் காணப்படும். எனவே கண்களுக்கு சிகிச்சை மேற்கொள்ளுங்கள்.




முக்கியமான நேரங்களில் நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இது உங்களின் வளர்ச்சியை பாதிக்கும். பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடந்து கொள்வது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் மிதமான வளர்ச்சியே காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும். இதற்கு நேரம் செலவாகும். உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடனான உறவு சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதிப்பு தரக்கூடிய அத்தகைய உணர்வுகளை தவிர்த்தால் உறவில் நல்லிணக்கம் காணப்படும். பணப்புழக்கம் ஏமாற்றத்தை அளிக்கும் விதமாக இருக்கும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் அடிப்படைத் தேவைகளை சமாளிப்பது கூட கடினமாக இருக்கும்.




இன்று நீங்கள் அமைதியின்றி உணர்ச்சி வசப்பட்டு இருக்கும் வகையிலான சூழ்நிலை காணப்படும். இன்று சமநிலையோடு இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் மற்றும் வளர்ச்சியை அளிக்கும்.

திறமையாக பணியாற்ற பணிகளை ஆற்றும் போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக, பேசுவதற்கு முன் யோசித்து பேச வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தைக் கையாளும் போது கவனம் தேவை. உங்கள் தந்தையின் உடல் நலத்திற்காக பணத்தை செலவு செய்ய நேரும். நெஞ்செரிச்சல் காரணமாக உங்கள் தந்தை அவதிப்பட நேரலாம்

# சிலாபம் மீனவர் இருவரைக் காணோம் அவர்களின் படகு மட்டும் மீட்கப்பட்டது



(உடப்பு நிருபர்-க.மகாதேவன்)

மீன்பிடித் தொழிலுக்காக கடலுக்குச் சென்ற சிலாபம், வெல்ல கிராமத்தைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

இவ்விரு மீனவர்களும் நேற்று அதிகாலை 2.00மணியளவில் ஒருநாள் மீன்பிடிப் படகொன்றில் கடலுக்குச் சென்றுள்ளனர்.

இவர்கள் சென்ற படகு கடலில் மிதந்து கொண்டிருந்ததை மற்றொரு மீன்பிடிப் படகில் இருந்த மீனவர்கள் கண்டு, அது குறித்து கரைக்குத் தகவல் அளித்துள்ளனர். இந்தத் தகவலைத் தொடர்ந்து, அந்த மீனவர்களைத் தேடும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு காணாமல் போயுள்ளவர்கள் சிலாபம், வெல்ல, கருச பாடுவ பிரதேசத்தில் வசிக்கும் 40 மற்றும் 44 வயதுடைய இரண்டு மீனவர்களாவர்.

அவர்கள் கடலுக்குச் சென்ற மீன்பிடி படகு தற்போது கரைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் குறித்து சிலாபம் வெல்ல மீனவர் சங்கத்தினால் இலங்கை கடற்படைக்கும், கடற்றொழில் திணைக்களத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.